# திருவருட்பயன் : அத்வைதவிளைவு ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T|800|948

உ

# திருவருட்பயன் : அத்வைத விளைவு

திருவள்ளுவர் வேதம்; திருவருட்பயன் ஆகமம்; அருணூல். 'புணர்ந்தாற் புணருந்தொறும் புதிது' அது. அதற்கு உரை காண நாம் யார்? என்று பண்டிதமணி ஐயா 'திருவருட்பயன்' நூலுக்குத் தாம் எழுதிய உரையின் அவையடக்கத்தில் கூறியுள்ளார். மேலும்,

திருவருளுக்குப் பயன் சிவப்பிரகாசம். சிவப்பிரகாசத்துக்குப் பயன் சிவஞானசித்தி. சிவஞானசித்திக்குப் பயன் சிவஞானபோதம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்கள் திருவருள் வழிநின்று சிவம் பிரகாசிக்கப்பெற்று, அதனால், சிவஞானம் சித்தித்துச் சீவபோதம் கீழாகச் சிவபோதம் மேற்கொள்ளற்பாலன. சிவபோத மேற்கொள்ளுதல் சிவமயமாதல்.

இவ்வாற்றான் பிரகாசம் சித்தி போதங்களைப் படிமுறையால் அணுகுதற்கு உபகாரஞ்செய்வது 'திருவருட்பயன்' என்பது பெறப்படும்.

பராசக்தி ஆன்மாக்களுக்கு அருளும் பொருட்டு முகஞ் செய்யும் முதனிலை ஓங்கார வடிவாகிய விநாயகமூர்த்தமாதலின், அம்மூர்த்தம் நற்குஞ்சரக்கன்று என நூலின் முகத்தில் வாழ்த்தப்பட்டது. அதுதான் 'உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்' என்று திருவாசகத்திற் பேசப்பட்டது.

ஓங்காரமூர்த்தியின் திருவருள் வழிப்படின், கலை ஞானம் எளிதிற் கைவரும்.

அகரவுயிர்; 'அகர முதலான்' என்று சம்பந்தர் இறைவனைப் பாடுகின்றார். 'ஒன்றின்றால் அக்கரங்களின்றா மகரவுயிரின்றேல் இக்கிரமத்தென்னு மிருக்கு' என்பது சிவஞானபோம். 'அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே யுலகு' என்பது திருக்குறள்.

அனைத்தையுங் கடந்ததும் முத்திப் பெரும் பயனாயுள்ளதுமான பதி, உயிராகி அறிவாகி எங்கும் நிறைந்து கிருபாசமுத்திரமாய் நிற்கின்றது; அதனை அறிக என்றிவ்வாறு பதிமுதுநிலை பேசுகின்றார். கடவுள் சர்வ வியாபகர். கடவுள் உயிர்களை உய்யக்கொள்ளும் சக்தியோடு கூடியவர்; கருணாமூர்த்தி. கடவுள் ஒப்பில்லாதவர். இறைவன் இருந்தபடி இருக்க, அவன் சந்நிதியில் ஆன்மாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யும்பொருட்டு ஐந்தொழில்கள் இடையீடின்றி நிகழ்கின்றமையின், 'போகாப் புகல்' என்றார். கடவுள் ஆன்மாக்களுக்குப் பற்றுக்கோடாயுள்ளவர். கடவுள் வாக்கு மனாதீதராயினும் தடத்த வடிவமுடையவர். கடவுள் தம்வழி நிற்பாரறிவைத் தம்வயஞ் செய்து நிற்பர். கடவுள் தடத்த வடிவினராயினும் அறிவிக்காமலே எல்லாம் அறிபவர். சரீரம் முதலியன உயிர்கள் உணரும் பொருட்டு உணர்விப்போன் உபகரித்தவைகளே. ஆருயிர் என்பதற்கு அருமையான உயிர் என உரைத்தலும் பொருந்தும். அருமை அறிவுச் சிறப்பு.

ஒன்றாதலால் உயிர்ப்பும், வேறாதலால் அறிவும், உடனாதலால் அனுபவமும் உயிர்களுக்கு விளங்கும். கடவுள் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று உபகரிப்பவர். இறைவன் நிறுத்துவதோர் குணமிலான். அவனை நண்ணுதல் நண்ணாமை உயிர்களின் முயற்சியின்பாலன. இறைவன் ஆன்மாக்களின் சுகசொரூபமாய்க் கரையிலாத மாக்கருணை வெள்ளமாய், யார்க்கும் பொதுவாய் நிற்கின்றான். அவனை அனுபவித்தற்கு உயிர்கள் பூரண சுதந்திரம் உடையன. கடவுள் தம்வழி நிற்பார்க்குச் சுகஞ் செய்பவர். 'மன்னு பவம் தீர்க்கும் மருந்து' கடவுள். கடவுள் வழிபடற்பாலர்.

துறந்தோர் முத்தர்; துறப்போர் பெத்தர். உயிர்கள் எண்ணில்லாதவை. துறப்போர் மூவகையாயிருப்பர். மும்மலம் இருமலம் ஒரு மலமுடையாரை முறையே சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்பர். உயிர்களிற் சகலர் தாம் மல பந்தமுடையாரென்பதை அறியார். உயிர்கள் தம்வயமின்றி, அவத்தையுறுபவைகள். சித்து, சடத்துக்கு மாறானது. சித்து அறிவுப் பொருள்; சடம் அறிவில்லாதது. ஆன்மா அறியுஞ் சித்து; பரமான்மா அறிவிக்குஞ் சித்து. உயிர்கள் மற்றொன்றைச் சார்ந்து அறிபவைகள். உயிர்களுக்கு அறிகிற தன்மை உண்டு.

சத்து என்னுஞ் சொற்கு, உள்ளது என்பது பொருள். உள்பொருள் மூன்று. அவற்றுள் இரண்டு சித்து; ஒன்று சடம். சித்துக்குச் சடம் கீழ்ப்படுவதாதலின் சித்துச் சத்தின் முன் சடசத்து விளங்கா தடங்குதலின் இல்லது போன்று அசத்து எனப்படும் சித்துச் சத்து இரண்டினுள் ஒன்று அநாதிமுத்தி சித்து; மற்றையது அநாதி பெத்த சித்து. சடசத்தினின்றும் பெத்த சித்தை விடுவித்துத் தன்னோடு அத்துவிதஞ் செய்து வியாபகமாகிய அநாதிமுத்தசித்தின் முன், பெத்த சித்துச் சூனியமாயினும் சித்தாதலின் அடங்கி விளங்கும். அதனால்அது சத்தாதலும் அசத்தாதலுமுடைத்தாய் சதசத்தெனப்படும். சித்துச்சத்து இரண்டும் சித்துத் தன்மையால் வேறுபாடு பெரிதாயுள்ளவை. சித்துச் சத்தாவது பதியேயாதல் ஐயத்தினீங்கித் தெளிவார்க்கு இனிது புலனாகும். அதனால், பதி சிவசத்து எனப்படும். சிவசத்து என்பதற்குச் சித்துச்சத்து என்பது பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்து என்றும் உள்ளது. அது சிவசத்து, சீவசத்து, சடசத்து என மூன்று வகை: முறையே சிவம் ஆன்மா மலம் எனப்படும். சிவசத்து என்றும் ஒரே இயல்பிற்று. சீவசத்து சார்ந்ததன் வண்ணமாவது. சடசத்து காரியப்படுவது. அசத்துக் காரியப்பாடு. அஃது என்றும் ஒரே இயல்பிற்று ஆகாதது; தோன்றி நின்று ஒடுங்குவது. சடசத்துக்கள் காரியப்படுதலின் அசத்தெனவும்படும். அவற்றுக்குக் காரியப்பாடாவது பந்தஞ் செய்து நிற்பது. சீவசத்தும் அசத்தைச் சார்வுழி அசத்தாம். இந்நிலையும் ஒருவகைக் காரியப்பாடாம்.

சீவசத்துச் சார்தலும் அறிதலும் உண்மை பெறப்பட்டது. சிவசத்துக்கும் அசத்துக்கும் ஒன்றை ஒன்று சார்தலும் அறிதலும் இல்லையாம். 'ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்' என்றவாறு. சிவத்தைச் சார்ந்து சிவமாதல் ஆன்மாவுக்கு இயற்கைநிலை; என்றும் உள்ளநிலை; அதை அறிவது முத்திநிலை. சடத்தைச் சார்ந்து அசத்தாதல் அன்மாவுக்குச் செயற்கை நிலை; மாறுநிலை. அதை அறியாது பெத்தநிலை உயிர்கள் சார்ந்ததன் வண்ணமானவைகள்; சதசத்துக்கள்.

சித்துக்களாகிய பதியும் ஆன்மாவும் ஒன்றையொன்று கவர்ந்து நிற்பன. ஆன்மா பதியைக் கவர்தற்குத் தடையாயுள்ளது, சடசத்தாகிய மூலமலம். தடையை நீங்கும்பொழுது, பதியின் கவர்ச்சி, பரிக்கிரக சத்தியாகிய மாயையாய் நிகழுமென்பதும், ஆன்மாவின் கவர்ச்சி மூலமலச் சார்ச்சியினாலே கன்மமலமாகும் என்பதும் உயத்துணர்க. சிவசத்து விளங்க, ஆன்மா அதன் மயமாகி நிற்க, சடசத்து மூன்றினுள் இருள்சேர் இருவினையாகிய கர்மம் சேராததாக, சுட்டுணர்வைச் செய்யும் மாயை வேண்டாததாக, ஆணவம் ஒளிமுன் இருளாகி வலியழிய, சத்து ஒன்றேயாகி நிற்றலைச் சிந்திக்க.

மன் - சிவம், மன்கண் - திருவள். தன்னையும் பொருளையும் காட்டுகின்ற ஆதித்தப்பிரகாசம், பகற்குருடாகிய கூகைக்கு இருளாயிருக்கும். ஆதித்தப் பிரகாசமும், அதனால் விளங்கும் பொருளும், தனது கண்ணும், கூகைக்குப் பகலில் இருளே. காண்பானும் காட்சியும் காட்சிப் பொருளும் காட்டுவோனுமாய் நிற்கும் சிவமென்னும் பேரொளி அருள்வழி யொழுகாதார்க்கு இருளாய்விடும்.

பந்தநிலையிற் கண், ஊனக்கண்; முத்திநிலையிற் கண், ஞானக்கண், உயிர்கள் ஞானக்கண்ணை இன்றியமையாதன. உயிர்கள் பந்தநீங்கி அருளைச் சார்தற்பாலன.

மலவிருள் துன்பத்துக்குக் காரணமாயுள்ளது. இருண்மலம் தான் பற்றியிருப்பவைகளை மறைத்து நிற்பது. இருண்மலம் பொருள்களை மறைப்பதன்றித் தன்னையும் மறைப்பது. ஒளிமுன் இருள் இல்லையாகலின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா ஒளிக்குள் ஒளிக்குமாயின் அதற்கு இல்லையாமெனக. இருண்மலம் முத்தி நிலைவரை நிலைத்து நிற்பது. கேவல சகல நிலைகளில் ஆன்மா தன்னையே அறியாது. சுத்த நிலையில் அதன் முன் இருண்மலம் நில்லாது. யாவையும் சூனியம் சத்தெதிர் ஆதலின் ஒளிமுன் இருள் நில்லாது. இருண்மல இயல்பு எந்த நிலையிலும் புலமாகாது. இருண்மலம் அறியாமையைத் தந்து நிற்பது. இருண்மலம் பொருள்; ஆன்ம குணமன்று. சிவாதீனமெய்திச் சிவமாகிய ஒளியிலே தூங்காமற் தூங்கிச் சுகம் பெறுகின்ற ஆன்மா, துன்ப இருளாகிய ஆணவத்தைச் சார்தலும் இல்லை. இருண்மலப் பிணிப்பு அநாதியே இயல்பாயமைந்தது. சிவமாகிய ஒளி மேற்படுமியல்பு உடையதாயினும் அதனை உயிர் கவர்ந்தாலன்றி ஆணவ இருள் நீங்காது. இருண்மல இரவில் கன்மத்தின் விளைவிடமான மாயை ஒரு விளக்கு.

மண்ணினிற் பிறந்தார் ஈட்டத்தக்க பொருள் அருளே. உலகத்துப் பொருளெல்லாம் அருளை ஈட்டுவதாகிய உய்வினைக்குக் கருவிகளே என்பது கடைப்பிடிக்க. திருவருள் ஒப்புயர்வில்லாதது. திருவருள் பெருக்க நுகர்வினைகளைத் தந்து, பேரொளியாவது. மாயாகாரியமாகிய கருவிக்கு விளக்கஞ் செய்யுந் தன்மை உளதென்பதும், முத்தொழிலிடையறாது நிகழும் என்பதும், பதி கண்டு காட்டிக் காணும் என்பதும் நுண்ணறிவாலுணர்க. திருவருள் பெத்தான்மாக்களுக்கு ஊனுக்கூடாக அறிவு விளக்கஞ் செய்வது. பெரியோருடைய போகம் அமிர்தம் எனவும், சிறியோருடைய போகம் மலமெனவும் கூறப்படுவன. திருவருளைப் பந்திகளான உயிர்கள் அனுபவியா. உயிர் தன் உணர்வுக்குத் திருவருள் வியஞ்சகமாதலை அறியாது. திருவருள் தாரகமாயும் பிரேரகமாயும் உபகரிப்பது. திருவருளைப் பெறாதோர் தம்மை அறியார்; தம்மையன்றித் திருவருளையும் அதனையுடைய சிவத்தையும் இழப்பர். சர்வவியாபகமான திருவருளை அறியாமை பெருங் குற்றம். திருவருள் ஆன்மாவின் நுகர்ச்சிக்குரிய இன்பப் பொருள். திருவருள் விரைந்து பயிலற்பாலது. பக்குவர்களது சுட்டுணர்வுக்கு விடயமாகி உபகரிக்குந் திருவருளே அருட்குரு. அருட்குரு வடிவம் பக்குவத்துக்கேற்பப் பல்வேறு வகைப்படும். அருட்குருவே நோய்நீக்க வல்லார். அருட்குரு அறிதற்கரியர். பொய்யுலகிலிருந்து கொண்டே மெய்யுலகாகிய அருட்குருவை அறிதல் சிறிதுமில்லை. அருளுரு - அருட்குரு. அருட்குரு வடிவம் பார்வைபோன்று வசப்படுத்துவது. இருப்பதாயின், அருட்குருவை வேண்டி, இருக்குக. பாவகனால் விடந்தீர்தற்கையமில்லை; குருவினால் இருள் நீங்குதற்கு ஐயமில்லை. அருட்குருவானன்றி இருண்மலம் நீங்காது. சிவமே அருட்குருவாய் முன்னிலைப்பட்டருளும். துரியாதீதத்தில் ஒரு கருவியோடு ஆன்மா கூறி நிற்றலாலும், அவ்வொரு கருவியையும் கடந்த வழியே சிவஞானம் கருவியாதலினாலும் தொண்டர் துரியங் கடந்தவர் ஆவர். அருட்குருவின்றி வீட்டுநெறி கைகூடாது. ஞானம் மலத்தை எரிக்கும் அக்கினியாதலின் குருவின் முன்னிலையில் ஆன்மா விடத்தே ஞானம் வெளிப்பட்டு மலத்தை எரிக்கும் என்க. அருட்குருவின்றி ஞானம் அமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வவியாபகமான திருவருள் புலப்படாதாதல் சித்தவிகாரக் கலக்கத்தானாதலின், அக்கலக்கந் தீரவே இறைசத்தி கொளல் அனுபவமாயுணரப்படுமென்க. இருவினை ஒத்தவழிச் சத்திநிபாதம் உண்டாம். விசாரிக்கற்பாலன ஏகனாதி ஆறு பொருள்களுமாம். மற்றொரு பிரகாரம் விசாரிக்கற்பாலன நான்காம். உடம்பினியக்கம் உயிரை இன்றியமையாதவாறு போல, உயிருணர்வு திருவருளுணர்வை இன்றியமையாதென்பதாம். உயிர் ஊனை இயக்குவது. திருவருளுணர்வு உயிரை உணர்விப்பது. உயிர் உணர்த்துவதோடு ஒன்றுபட்டு அத்துவிதமாயிருப்பது. ஆத்மா பளிங்கு போன்றது.

உயிர் ஒன்றை அறியுமாறு, உயிர்கலந்த அருள் அறிந்து அறிவிக்க அறியுமாறாம். உயிர் அருள்வழிப்பட்டு நின்று, அது செய்விக்கச் செய்யற்பாலது. அருள்வழிப்பட்டு நட. அருளொளியில் முழுகி நில். சும்மா இரு.

அதுவாதலனுபவம் சொல்லுந் தரமன்று. மலநோய் நீங்கிய வழியே திருவருள் தித்திப்பதாம். பொய்ப் பாவனை போக்கற்பாலதாம். ஒளி விளக்கமே உயிர்க்குப் பற்றுக்கோடாம். அருள்வழிப்பட்டு மலங்கழிந்து சுகமெய்துகின்ற சீவன்முத்தனே தலைவன் எடுத்துச் சுமப்பவன் என்பதையும், அவனை அன்பினால் விரும்பியபொழுதே பெறலாம் என்பதையும் உணர்வான். அருள்விளக்கம் உற்றவழி வினை ஏறாது. திருவருள் உபகாரம் வஞ்சிக்கப்படாது. படிகத்திற்கு ஒளிநேயப்பொருள்; ஒன்றுபட்டு விளங்குதலின். இருள் பகைப்பொருள்; ஒன்றுபட்டு மறைத்தலின். படிகமனைய உயிர் சிவத்தைச் சார இருள் நில்லாது. உயிர் அருளை முன்னிட்டு நிற்கற்பாலது. உயிரின் அறிவு விளக்கத்துக்குத் திருவருள் உபகாரம் இன்றியமையாதது. அவனருளாலேதான் அவனைக் காண்பதாம். இருளின் எழுஞ்சுடரின் பின்புகுதல் சாதகம்; பயன் இன்புறுதல். அருளொளியை முன்னிட்டுச் சேறலே இன்பம்.

அருட்சத்தி திரோதான நிலையில் தோழியாயும், பின் தாயாயும் உபகரிக்கும். ஒருவன் ஒருத்தி உற்றவழி உண்டாமின்பம் சிற்றின்பமாய் இருவர்க்கும் உரியது. ஒருவனாகிய இறைவனை ஒருத்தியாகிய உயிர் உற்றவழி உண்டாம். இன்பம் பேரின்பமாய்ப் புணர்ந்தாற் புணருந்தொறும் புதிதாய் ஒருத்திக்கே உரியது. இவை தம்முள் வேற்றுமை அருளொளி வாயிலாக அருளுடையானைப் பெறுதலே பேரின்பம். சிவம் இன்பகனமாயிருந்து, தான் மற்றோரின்பத்தை எய்தவேண்டாதே, எய்துவார்க் கீவது. அத்துவிதமாவது பிரிவில்லாத இருபொருளின் ஆதியந்தமில்லாத கூட்டரவு. அத்துவித முத்திநிலையை உணர்வதே பேரின்பம். இன்புறு நிலைக்குபகாரம் அத்துவிதம். அத்வைத முக்திநிலை எய்தியோர் பிறவி எய்தார். உன் செயலற்று நில். பற்றுக்களை வலிந்து துறப்பது உண்மைத் துறவாகாது. மெய்யை அனுபவிப்பார்க்குச் செயலறவு தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும். அவன் ஒன்றும் வேறும் உடனுமாகவே, இவனும் ஒன்றும் வேறும் உடனுமாவன். இருமை தோன்றாத ஒருமையின் பெருமை சொல்லிறந்தது. ஆன்மாவைச் சிவத்தோடு ஒன்றாக்கி நிற்பது அன்பு. அதனாலே அன்பே சிவம் எனப்படும். அத்தகைதாய அன்பே இன்பு. அறிவு அன்பாகி இன்பம் பயத்தலினாலன்றே அன்பை ஆராய்ந்தது சங்கத்தமிழ். அறங் கைவந்து மனமாசு நீங்கியவர்கள் மெய்ப்பொருள் துணிந்து அன்பு செய்யும்வழி, அவ்வன்பில் விளைவது இன்பம். இன்பத்தை விளைக்கும் அன்பு காமம் எனவும் படும். காமத்துப்பால் இன்பத்தை விளைக்கும் அன்பைச் சொன்னதென்றறிக. அதனிலக்கணம் அன்பினைந்திணைக் களவியல். ஆன்மா முத்திநிலைக்கண் அறிவுந் தொழிலும் இச்சையில் அடங்க 'இன்பமே என்னுடைய அன்பே' என்று சிவத்தை நுகர்ந்திருக்கும். மூலஇச்சை சுத்தப்பட்ட நிலை இது. அன்பு நிலையே இன்பு.

வேதம் பொது; ஆகமம் சிறப்பு. பொது உலகர்க்கு உரியது; சிறப்பு சத்திநிபாதர்க்கு உரியது. மறையின் ஒழிபொருள் வேதாந்தம். அதைத் தெரிந்துரைப்பது சைவம். வேதாந்தம் வைதீகம் எனவும் படும். சைவம் அதன் தெளிவு ஆதலின் வைதிக சைவம் எனப்படும். சைவநூல்கள் சிவாகமங்கள்; அவைகளே முடிந்த முடிவாகிய சித்தாந்தம். உலகர் உயர்ந்தோர். சத்திநிபாதர் அருள்பதிந்தவர்கள்; அருள் வைதிகம் முதிர்ந்தவழித் தலைக்கூடுவது; அருள் கைவந்தவர்களுக்கு உபதேசக் கிரமத்திற் கிடைப்பது ஆகமம். வேதம் ஆகமம் என்ற சொற்களின் பொருளே அவற்றின் இயல்பைக் காட்டும். ஆகமங்கள், ஆத்மாக்களின் சத்திநிபாதத்துக்கு ஏற்ப வேறுபட்டிருக்கும்; சம்பந்தர் அடைந்த அருணெறி ஒன்றாய், மாணிக்கவாசகர் அடைந்த அருணெறி மற்றொன்றாய் அமைந்திருக்கும். அதனால் அருணெறிகளாகிய ஆகமங்கள் எண்ணிலி கோடியாய்ச் சிறப்பு நெறிகளாய் இருக்கும். அதனால் ஆகமஞ் சிறப்பு நூல்கள் என்று கொள்ளுதற் குரியவைகள்; ஐந்தெழுத்தின் பொருளைத் தெரிவிப்பவைகள்.

ஆவி எழின்மாயையின் உபகாரத்தால் பாசம் நீங்கிச் சத்தி வாயிலாக இறைமை எய்தி உய்தற்பொருட்டு, ஓங்காரம் ஐந்தெழுத்தாய் அமைந்திருக்கின்றது. ஆன்ம எழுச்சி, மல எழுச்சி, ஞான எழுச்சிகளாகிய ஐந்தெழுத்தினியல்பு சிந்திக்கற்பாலது. ஊனநடனம் நீங்கிய வழி, ஞான நடனம் சித்திக்கும். ஊன நடனத்தினின்று மீண்ட பின்பே ஞான நடனம் சித்தியாம். சிகராதி பஞ்சாக்கரப் பேறு, அரிதிற் கிடைப்பதாம். சிகராதி முத்தி பஞ்சாக்கரமே மீளா நெறி. முத்திகாமி ஓதும் ஐந்தெழுத்துச் 'சிவ' 'ய' வுக்கு வாழ்வு 'சிவாய'. இச்சை இன்னிசையாக மாறினன்றி உய்தி கூடா. திருவருள் திருமேனியாயவழி சீவசிவம் நிற்கும் நிலை பேசியவாறு. முத்திநிலையில் மகரமாகிய மலம் இல்லையாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரமாகிய திரோதானம் வகரமாகிய திருவருளேயாக, யகரமாகிய ஆத்மா திருவருள்மயமாய்ச் சிவத்துவமெய்திச் சிவமேயாம். முத்திநெறி சித்தித்தவழி ஐந்தெழுத்து மூன்றெழுத்தாம். முதல்வன் சலமிலன். அவனை நண்ணாமை நண்ணுதல்கள் முறையே ஆன்மாவின் குற்றமும் குணமுமே. ஐந்தெழுத்திலே ஆன்மவெழுத்தாகிய யகரம் திருவருளிலேயே கிடைக்கும்படி உச்சரிப்பது மரபு. சிவாயநம என்னும் மந்திரத்துள் யகரத்தின் இருபுறத்தும் நிற்பன 'வா' என்னும் சிவசக்தியும் 'ந' என்னும் சக்தியுமேயாதல் காண்க. மந்திரம் வல்லார் இருதலை மாணிக்கம் என்று 'சிவயவசி' என்னும் அஞ்செழுத்தை அருமையாகப் போற்றுவர். சிவசத்தியின் வியாபகத்திலே ஆன்மா முழுதுமடங்கி அடிமையாகி வாழ்தலை இருதலை மாணிக்கத்தின் ஓசையும் பொருளும் உணர்த்துவன. பந்தநிலை துவிதமார்க்கம்; ஆன்மா சிவத்தோடத்துவிதமாயிருந்தும் தன்னை வேறாகக் கருதும் நிலை. இந்த நிலையைச் செம்மை செய்வது வேதம். ஐந்தெழுத்து நூல்கள் மூலம் அத்வைத நிலையை விளக்கும்.

சீவபோதம் போன சீவன்முத்தர் பேரின்ப நித்திரையாகிய யோகங் கூடுவர். அவர்களிடம் ஒரு வாக்குப் பிறந்தால், அது சீவவாக்காகாது சிவவாக்காகும். சீவன்முத்தர் சிவமும் அல்லர்; சிவத்தின் அதிட்டானங்களும் அல்லர்; பசுக்களும் அல்லர்; புணர்ந்தாற் புணருந்தொறும் புதிது புதிதான சிவானந்தாநுபவ சிவபோகங்களை நுகர்ந்துகொண்டிருப்பவர். சீவன் முத்தர் எவ்வகைத் தொழிலுமின்றிச் சிவபோக நுகர்ந்திருப்பர். சீவன்முத்தர் சிவமே அறிவர். சும்மா இருத்தல் சிவபோதம் மேற்படச் சீவபோதம் அடங்கியிருத்தல். சீவன் முத்தர் ஆமையாய்ச் சீவபோதத்துக்கு மீளார். சிவமேயான சீவன் முத்தனுக்கு இரண்டாவதொன்றில்லை. சிவ ரகசியமறிந்த சீவன் முத்தனான சிவஞானி, உலகர் இரங்குவதற்குத் தானிரங்காது சும்மாவிருப்பன். அவனுக்கு எல்லாம் சிவமயம்; நிகழ்ச்சி அனைத்தும் சைவநீதி. மெய்ப்பொருள் நாயனார் அதிசூரன் செயலை எள்ளவில்லை. சீவன்முத்தனின் காட்சி துனியில் காட்சி. சீவன்முத்தர்பாற் செயல் நிகழுமாயின் அது செய்யாச் செயல்; சிவச் செயல். அதற்குப் பயன் வாய்மை. வாய்மை சிவசத்து. தன்னிலைமை எனலுமாம். அது திருவள்ளுவநாயனாரால் பேராவியற்கை எனப்பட்டது. பயன் சிவானுபவம். சீவன்முத்தரின் செயல் : விளம்ப விளம்பல், பணியப் பணிதல், கருதக் கருதல், உரைக்க உரைத்தல், நணுக நணுகல், இசைய இசைதல், நுகர நுகர்தல், நினைய நினைதல், புணரப் புணர்தல், தொடரத் தொடர்தல், விரும்ப விரும்பல் என்றிங்ஙனமாதல் விளம்புமா விளம்பே என்றற்றொடக்கத்துத் திருவிசைப்பாக்களின் இறுதிகளால் உணரப்படும். சீவன்முத்தர் சும்மாவிருந்து சிவத்தை அனுபவிப்பர். சீவன் முத்தருக்கு இனி வினையில்லை. சீவன்முத்தர் வினைகள் வந்துவந்து தாக்குந்தோறும் ஓங்குணர்வினுள் உள்ளடங்கி நிற்பராதலின் மாயேயங்களைக் காணுகின்ற விபரீதவுணர்வு மேற்பட்டு மெய்யுணர்வு கீழ்ப்பட்டு மலத்துளழுந்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்க்கில்லை என்பதும், உடம்புள்ளதாயினும் அவருணர்வு, உடம்புவிட்ட பரமுத்தி நிலையிலேயே நிலைபெறும் என்பதும் காண்க. சீவன் முத்தி பரமுத்தியே. சிவம் இருந்தபடி இருக்கும்; அது விகாரம் அடைவதில்லை. அவ்வாறே திருவருளும் இருந்தபடி இருக்கும்; அதற்கு இரங்காமலிருக்கமாட்டாமை விகாரமற்ற இயல்பு. சிவம் குணி; திருவருள் குணம். திருவருள் திருமேனியாகத் சிவமேயாய முத்தான்மா, கள்ளத் தலைவர் துயர் கருதலாவது, திருவருள் இரங்காமலிருக்கமாட்டாது தான் அதன்வழிப்பட்டு நிற்றல். வழிப்பட்டு நிற்றலாவது ஆத்ம முனைப்பின்றி வேகங்கெட்டு நிற்றல். அதனால் முத்தான்மாவானது அலைவு அலையா அலை என்று வைத்து உரைக்கப்பட்டது. சிவமேயாய சீவன் முத்தர் திருவருள் வெள்ளத்தில் மூழ்கித் திளைத்துக் கருணையே வடிவமாய்க் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கியிருப்பர்.

சைவசித்தாந்த நூல்கள் பதினான்கு. அவற்றுள் சித்தாந்த அட்டகம் எனப்படும் எட்டையும் செய்தவர் உமாபதி சிவாசாரியார். அவை : திருவருட்பயன், சிவப்பிரகாசம், சங்கற்ப நிராகரணம், உண்மைநெறிவிளக்கம், கொடிக்கவி, வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, நெஞ்சவிடுதூது என்பனவாம்.

சைவசித்தாந்த சாத்திரங்களில் சிவஞானபோதம், சித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் நான்கையும் பிரஸ்தான சதுட்டயம் என்று கொள்ளலாம். உபநிடதம், பிரமசூத்திரம், கீதை மூன்றையும் பிரஸ்தானத் திரயம் என்பர். இவை மேனிலையை அடைவிக்கும் மூன்று நூல்கள் என்பது கருத்து. பிரஸ்தானம் மேனிலை, திரயம் மூன்றையும், சதுட்டயம் நான்கையும் குறிப்பன.

திருவருட்பயனில் பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருண்மல நிலை, அருளது நிலை, அருளுரு நிலை, அறியு நெறி, உயிர்விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்தருணிலை, அணைந்தோர் தன்மை எனப் பத்து அதிகாரங்கள் உள. ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பத்துப் பத்துக் குறள்களாக நூறு குறட்பாக்கள் உள. அவற்றின் பொருள்களைத் தெள்ளிதின் தெரியும் பொருட்டுப் பண்டிதமணி ஐயா உரைவிளக்கஞ் செய்துள்ளார். அவ்வுரை நுண்மையவர் உச்சிமேற் கொள்ளும் தகையது. இவ்வுரை நீண்டகாலமாகக் கையெழுத்துப் பிரதியாகவே இருந்தது. இதனைத் திருப்பிப் பார்த்துப் படி எழுதும் பாக்கியம் தமியேனுக்குக் கிடைத்தது. அப்போது இவ்வுரையிற் கண்ட சில விடயங்களைச் சிறிது சுருக்கி எழுதவேண்டும் என்னும் எண்ணம் உண்டானது. அதன் பிரகாரம் இயன்றளவு சுருக்கி எழுதியுள்ளேன். திருவருட்பயனும், அதற்கு உரைகண்ட பண்டிதமணி ஐயாவினது திருவருட் சிறப்புமிக்க திருவடிகளுக்கு இது சமர்ப்பணம்.

*-----*----- *

இனி, அவர் செய்த "அத்வைத சிந்தனை" என்னும் "அத்வைத விளைவு" என்ற நூலின் சுருக்கத்தையும் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்வைத விளைவு

பண்டிதமணி ஐயா, 'அத்வைத சிந்தனை' என்னும் நூலில் "அத்வைத விளைவு" பற்றிக் கூறும் விளக்கங்கள்: இறைவன் உயிர்க்குயிராய் உயிரேயாய் இரண்டற்று இருக்கின்றான். உயிர் உடம்போடு இரண்டற்று உடம்பேயாய் இருக்கின்றது. இவ்வாறு இரண்டற்றிருக்கும் நிலைக்கு அத்துவிதம் என்று பெயர். இவ்விரு வகை அத்துவித நிலைக்கும் வேறுபாடுண்டு. உயிர்க்கு உடம்போடுளதாய அத்துவித நிலை, நிலையில்லாதது அநித்தியமானது. உயிரோடு இறைவனுக்குளதாய அத்துவித நிலை, நிலையானது; நித்தியமானது. உடம்பின் செயலனைத்தும் உயிரின் செயலே, அவ்வாறே உயிரின் செயலனைத்தும் உயிர்க்குயிராகிய இறைவன் செயலேயாம். உடம்பு மூலம் உயிர் செய்வதை, உயிர் செய்வது என்று உடம்பு அறியாது; அது சடம். உயிர் மூலம் உயிருக்குயிர் செய்வதை, உயிர் சித்தாயிருந்தும், உயிர்க்குயிர் செய்கின்தென்று அறிகின்றிலது; இது விசாரிக்கற்பாலது. அறியாத காரணம் அறியாமையாகிய ஆணவ இருளில் உயிர் முழுகிக் கிடப்பதேயாம். ஒளி இருளை அறியாது; இருள் ஒளியை அறியாது. உயிரோ, இரண்டுக்கும் இடமாய் இருக்கின்றது. பேரொளியை அனுபவிக்கும் ஆற்றல் உயிர்க்கில்லை. ஆகவே ஆணவ இருளுக்கு மேலே, பேரொளியும் இருள்செய்து விடுகிறது. 'ஒளியும் மிக இருளே' என்றும், 'ஒன்று மிகினும் ஒளி உள்ளம் கவரும்' என்றும் திருவருட்பயன் கூறுகிறது. அத்துவிதப்பட்டிருக்கும் இறையாகிய ஒளி, உள்ளம் எனப்படும் உயிரைத் தன்பால் ஈர்க்கும். காந்தத்துக்கும் இரும்பைத் தன்பால் இழுக்காமலிக்கமாட்டாமை இயற்கை. அவ்வாறே இறை ஒளிக்கு, இரங்காமாலிருக்கமாட்டாமை இயற்கை. இரங்காமலிருக்கமாட்டாமையின் பயன்: உயிரைத் தன்பால் ஈர்த்தலாம். உயிரோடு அத்துவதப்பட்டிருக்கும் இறையோடு உயிரும் அத்துவிதப்பட வேண்டும். இறை அத்துவிதம் அநாதி தொடக்கம் இல்லாதது. உயிர் அத்துவிதம் ஆதி தொடக்கம் உள்ளது. அது நீயாயிருக்கிறது. அவ்வாறே நீ அதுவாயிருக்க வேண்டும் என்றவாறு. தத்துவம் - அது நீ துவம் தத் - நீ அது. இரு வாக்கியப் பொருளையும் தரவல்லது, 'உடனாதல்' அத்துவித வஸ்துவாகிய இறையொளியின் விளைவுப் பயனே, உயிரெய்தும் சுத்தாத்துவித முத்திப் பேறு.

கண்ணுக்கு ஒளி உண்டு அவ்வொளி பொருள்களைக் காணாது புற ஒளியோடு அத்துவிதப்பட்டு, அவ்வொளி பரவுமிடங்களிற் பரவி, அவ்வொளி கண்டுகொண்டிருப்பதைத் தானும் காணும். அவ்வாறே, உயிரின் அறிவொளி தன்னோடு அத்துவிதப்பட்டிருக்கும் அருளொளியோடு அத்துவிதப்பட்டு, அருளொளி அறிந்து கொண்டிருப்பதைத் தானும் அறிவதன்றி, அருளொளியின் உபகாரமின்றி எதனையும் அறியாது. கண்ணொளிக்கு உபகாரம் புறவொளி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரின் அறிவொளிக்கு உபகாரம் அருள் ஒளியாகிய உள்ளொளி. இறைவன் தந்த இந்தச் சரீரம், அருள் ஒளியைத் தணிக்கைசெய்து, அதனோடு உயிரின் அறிவொளி அத்துவிதப்படுதற்கு உபகரிக்கின்றது. உடல் மூலம் உயிரின் அறிவொளிக்குக் கிடைக்கும் ஒளி, இருளிற் கிடைத்ததொரு சிறுவிளக்கு. இவ்விளக்கொளியால் திருத்தமுறும் உயிரறிவு, சுட்டறிவு. இச் சுட்டறிவால் சுட்டிறந்த பொருளை அறியமுடியாது. இந்தச் சரீரம் நமக்குக் 'கிடைத்த சரீரம்'. ஆதலால் உதவினோன் கருத்தறிந்து பயன்படுத்த வேண்டும். உடல் ஒரு குட்டிப் பிரபஞ்சம். இது, சத்த அர்த்தக் கூட்டரவு. பிரபஞ்சமும் அவ்வாறே. சத்த அத்துவா: மந்திரம் பதம் வன்னம் என முத்திறப்படும். அர்த்த அத்துவா: கலை, தத்துவம், புவனம் என முத்திறப்படும். அத்துவா - வழி. இந்தக் குட்டிப் பிரபஞ்சமான சரீரக் குடிலிலிருந்து கொண்டு உலகமாகிய பிரபஞ்சத்தைக் காணுகின்றோம்.

சினிமாத் திரையிற் காட்சிகள் போல, பிரபஞ்ச விசித்திர விநோதக் காட்சிகள் தோன்றிநின்று ஒடுங்குகின்றன. உடம்பு 'மாயா யந்திர தநு' என்பது சித்தியார். மாயை தநு கரண புவன போகங்களைத் தந்து, உயிர்க்குச் சுட்டிறந்த நிலை வருவதற்குப் பக்குவப்படுத்துவது. இந்த மாயை விடிவாமளவும் விளக்கு; விடியும் வரை பேணவேண்டிய விளக்கு; விடிந்த பின் இறையாகிய பெரிய விளக்கை உபகரிக்கும் விளக்குமாம். அத்துவித வஸ்துவை உயிர் அணுகுமாறு செய்யும் விளக்கு, மாயை என்றவாறு.

உயிரறிவு, விருத்தியாதற் பொருட்டு, உயிரின் அறிவொளி உயிர்க்குயிராகிய இறையொளியோடு அத்துவிதப்பட்டே தீரவேண்டும். அதற்கு உபகாரப்படுவது மாயை; அது ஒரு சடசத்தி; அதுவே பிரபஞ்ச மூலம். மாயையின் ஒருபுறம் சுத்தம்; ஒருபுறம் அசுத்தம். இந்த அசுத்தம், சுத்தாசுத்தம் எனவும்படும். அருள் ஒளிக்கிரணம் ஊடுருவுவதால் சுத்தம்; அழுக்கொடுப்பட்டதை மூடுவதால் அசுத்தம். ஆகவே, அசுத்தமாயை, சுத்தாசுத்த மாயையாம். பேரொளியைத் தணிக்கைசெய்யும் சுத்த மாயை ஐந்து மடிப்புக்கள் கொண்டது. சிவம், சக்தி, சதாசிவம், மகேசுவரம், சுத்தவித்தை என்பன அவற்றின் பெயர்.

உயிரை மூடுங் கவசங்கள் ஐந்து. ஆநந்தமய கோசம், விஞ்ஞானமய கோசம், மனோமயகோசம், பிராணமயகோசம், அன்னமயகோசம் என்பன அவை. அன்னமயகோசமே காணப்படும் இந்தச் சரீரம். கோசம் - உறை. விஞ்ஞானமய கோசத்தில் ஐந்து அடுக்குகள் உண்டு. காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பன அவற்றின் பெயர். 'விடிவாம் அளவும் விளக்கனைய மாயை' என மாயையைப் பாராட்டுகின்றது திருவருட்பயன். அதேசமயம், 'மாயை மயக்கமும் செய்யுமன்றே' என்கின்றது சதித்தியார். உயிர்போல ஒளிக்கும் இருளுக்கும் இடமாய் விடுகின்றது மாயை. சுத்த பாகம் சுத்த அறிவைத்தர, அசுத்த பாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவறியாமைகளைத் தந்துவிடுகின்றது. மாயை மயக்கஞ் செய்வதால் மலமுமாம். 'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' என்பது திருவாசகம். ஆணவமலம் இருப்பதால், மாயா மலத்தில் பிரபஞ்சம் காட்சியளிக்கின்றது. மலம் நீங்கப் பிரபஞ்சம் கயிற்றரவாம் என்க. 'பூமி' கயிற்றரவு ஆயினும் ஆகுக. மரத்தை மறைக்கும் மாமத யானையாயினும் ஆகுக. பிரபஞ்சம் உய்யக்கொள்கின்ற 'ஆறு' ஆம். கயிற்றரவுதான், கயிற்றைக் காண வழி செய்வது. இந்தப் பிரபஞ்சம், முத்திக்கு வழிசெய்யம் அத்துவா. மாயா தத்துவங்களில் அறிவைத் தூண்டும் தத்துவம் வித்தை, அதுபோல் இச்சையைப் பெருக்குந் தத்துவம் அராகம். இச்சைதான் கர்ம மூலம். இச்சை சுத்தப்படும் வரை, கர்மம் விளைந்து கொண்டே இருக்கும்.

உயிர்பிறந்திறந்து உழலும். சில மருந்துகள் உள்ளே அடங்கிக் கிடந்த நோயை வெளிப்படுத்திப் பின் சுகஞ் செய்வதுண்டு. மாயையின் உபகாரத்தால் கர்மம் பெருகுவது, ஆணவ மலம் வலிகுன்றுவதற்கேயாம். ஆணவவலி குன்றுவதாயினும், கர்மம், நல்வினை - தீவினை எனப்பட்டு, இருள்சேர் இருவினையாய், மலமாய், உயிரைப் பிறவிக்கடலில் ஆழ்த்திவிடுகின்றது. மலவரிசையிற் சேர்ந்துவிட்டது. ஆணவம், மாயை, கன்மம் மும்மலங்கள். மலபரிபாகமுள்ளவர்க்குப் பிரபஞ்சம் ஒடுங்கும். மற்றொரு பகுதியாய்க்குத் தோன்றும் வேறொரு பகுதியார்க்கு நிற்கும் இது, பிரபஞ்சவிநோதம். பிரபஞ்சந் தோன்றி நின்றொடுங்குவதற்கு, நிமித்தமாய் வினைமுதலாயிருப்பவன் இறைவன். இறைவன் வினைமுதல்; மாயை விதைமுதல். அஃதாவது, இறை முன்னிலையில் பிரபஞ்சந் தோன்றி நின்றொடுங்குங் காட்சிகளுக்கு, மாயை வித்தாயிருக்கும் என்றவாறு. பிரபஞ்சம் அந்தம் உறும் அந்தமாகிய இறைவனின் சொரூபம் சச்சிதானந்த சிவமாம். அதுதானே, அத்துவித வஸ்துவாய் உயிர்களுக்கு அருள்விளைவை அளிக்கின்றது.

அறியாமை உயிர்க் குணமன்று; அது உயிரைப் பற்றியிருப்பதொரு குற்றம். குணம், குணியிலிருப்பது; பிரிக்க முடியாது. பால் குணி; வெண்மை குணம். அறியாமை ஆணவ இருள்; அநாதியிலேயே உயிரைப் பற்றியதொரு மகாகுற்றம்; நீக்கக் கூடியது. தத்துவம் முப்பத்தாறு. அவை சிவதத்துவம், வித்தியா தத்துவம், ஆன்மதத்துவம் என முத்திறப்படும். சிவதத்துவம் ஐந்து. வித்தியா தத்துவம் ஏழு. ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு. மொத்தம் முப்பத்தாறு. ஆனந்தமயகோசத்தை இறையொளி ஊடுருவும்போது உயிரில் ஒருவித உயிர்ப்புண்டாய்த் தானொரு வஸ்து என்கின்ற களிப்புண்டாகும். செயல், அறிவு, இச்சை என்ற கிரமத்தில் உயிரின் அறிவு இச்சை செயல்கள் விருத்தியுறுதலின், கலை, வித்தை, அராகம் எனப்பட்டன. துயில்வோனைத் தட்டி எழுப்பி, அறிவு வரச்செய்து, விருப்பத்தை வினவுகிறோம். கலை -கலித்தல்; தட்டி எழுப்புதல். வித்தை - அறிவு. அராகம் - இச்சை. அறிவு சற்றே அரும்பத் தொடங்கியதும், அறிவு இச்சை செயல் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரமத்தில் குறிப்பிட்ட மூன்று தத்துவங்களும் பயன்படும். அறிவுக்குத் தவறுகளை உணரும் சக்தி பிறத்தற்கு, ஆன்ம தத்துவம், மனோமய பிராணமய அன்னமய கோசங்களை உதவி, உபகரிக்கும். அகக்கரண, புறக்கரண தத்துவங்கள், அறிவு விஸ்தரித்தற்குப் பேருதவி புரியும். மனம் என்ற தத்துவம், அகக்கரண புறக்கரணங்களுக்கு ஏகப் பிரதிநிதி. புறக்கரணங்கள் புறத்தே அறிந்தவைகளை அகக்கரணங்களுக்கு அறிவிப்பது மனம். கண் கண்டதைச் செவி அறியாது. இவ்வாறே புறக்கரணம் ஒவ்வொன்றும், ஒன்றறிந்ததை மற்றொன்று அறியாது. மனம், பொறிகள் தனித்தனி அறிந்தவைகளைத் தானறியும் சக்தி வாய்ந்த. மனத்தைப் பக்குபப்படுத்தாவிடின் மனம், தான் அறிந்தவைகளைக் கர்மத்துக்கேற்பப் பிறழ்வு செய்து, உட்கரணங்களுக்கு அறிவித்து, அவைமூலம், உயிர் அறிவையும் கெடுத்துவிடும். மனத்தின் சஞ்சாரத்தில் வெகு கவனம் வேண்டும். அறிவின் வழி பெரும்பாலும் மனம் நிற்பதில்லை. காரணமென்னை? 'தந்தவன்தன் ஆணை' என்கின்றது சித்தியார். இறைவன்வழி நின்று, மனத்தில் மாசுபடியாமற் பாதுகாத்தல் வேண்டும். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்கின்றார் வள்ளுவர். மனமாசு நீங்கியவர்களுக்கே, உயிரின் அறிவொளிக்கு இறையொளியின் தொடர்பின் இன்றியமையாமை புலப்படும். கர்ம மூலமான இச்சை சுத்தப்படும்.

தத்துவம் - அது நீ; துவம் தத் - நீ அது. அது நீயாயிருக்கிறது; அது இறைவன். அவ்வாறே நீ அதுவாதல் வேண்டும். அது கைகூடுவதாயில்லை. காரணம் என்னை? நீ ஆணவமான அதுவாயிருக்கின்றாய்; அப்படியிருப்பதுதான் நீ இறைவனோடு அத்துவிதப்படாமலிருந்தற்குக் காரணம். இறைவன் உன்னோடு அத்துவிதப்பட்டு நீயாயிருக்கின்றான். அவ்வாறு, ஆணவ இருள் உன்னோடு அத்துவிதப்பட்டு நீயாயிருக்கவில்லை. நீதான் இருளோடு அத்துவிதப்பட்டு இருளாயிருக்கின்றாய். இருளாயிருக்கும் இந்நிலை, உனக்கு அநாதியிலேயே அமைந்தது. ஆயினும் இந்நிலை, நிலையானதன்று. ஒரு காலத்தில் நீ அதுவாய், இறைவனோடு அத்துவிதப்படுதல் கைகூடும். அது - இறைவன். அது கைகூடியவழி அந்நிலை நிலையானதாம். ஆணவம் - இருள். இறைவன் - அருள். உயிர்க்கு இருளோடத்துவிதம் அநாதி; அருளோடத்துவிதம் ஆதி. 'அது நீ' என்ற முன்னிலை வாய்பாட்டோடு, 'அது நான்', 'அது இது' என்ற தன்மை படர்க்கைகள், இடவேறுபாடன்றிக் கருத்து வேறுபாடின்றி இருத்தல் காண்க. அவ்வாறே, 'நீ அது' என்ற வாய்பாட்டோடு, 'நான் அது', 'இது அது' என்னும் தன்மை படர்க்கைகள் இடவேறுபாடன்றிக் கருத்து வேறுபாடின்றி இருத்தல் காண்க. ஆகவே, 'அது நீ' என்னும் 'தத் துவ' மும், நீ அது' என்னும் 'துவம் தத்' தும் முக்கியமானவைகள்; ஏனைய இடங்களை அடக்குபவைகள். 'விளைவு', 'நிலை' என்ற வார்த்தைகள் குறிப்பிட்டுணர வேண்டியவைகள். 'விளைவு' இறைவனைச் சேர்ந்தது; 'நிலை' உயிரைச் சேர்ந்தது. 'இறை' சார்பைத் தன்வண்ணமாக்குவது; 'உயிர்' சார்ந்ததன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமாவது. உயிரத்துவிதம் அனைத்தும் 'துவம் தத்'; இறை அத்துவிதம் அனைத்தும் 'தத் துவம்'. உயிரின் ஆணவ அத்துவிதம் எப்படித் 'துவம்தத்தோ' அவ்வாறே அருளோடு அத்துவிதப்படுதல் 'துவம் தத்' தாம்; நீ அதுவாதல் என்றவாறு. இனி, மாயையை எடுத்துக்கொள்வோம். மாயா யந்திர தநு ஆகிய இவ்வுடற்குடிலில் உயிர் அத்துவிதப்படுதல் 'துவம் தத்' நாம்; இது அதுவாம் என்றவாறு. இது - உயிர்; அது - உடல். உயிர்ப்பொருட்டு, உயிர்க்குயிராகிய இறை, உடலோடு அத்துவிதப்படுதல் 'தத்துவ' மாம். அது இதுவாம் என்றவாறு. அது - இறை. இது - உடல். உயிர் உடலோடு அத்துவிதப்படும் பொருட்டு, உயிர்க்குயிர் உடலோடு அத்துவிதப்படும். இறைவன் தயாவான தத்துவன். தத்துவனின் தயைதானே அத்வைத விளைவு. இறைவன் உயிரோடத்துவிதப்பட்டிருப்பது, மாயையோடு அத்துவிதப்படுதலும், அத்துவித விளைவாய், தத்துவமாம்; அது நீயேயாதலாம். நிலையாய நிலையே, அத்துவித முத்திப்பேறு.

'தத் துவம்', 'துவம் தத்' ஆகிய இருவகை விளக்கத்தையும் தரும் சிறப்பு வாய்ந்தது 'உடனாதல்'. 'உடனாதல்' விளைவுமாம்; நிலையுமாம். இறைவன், 'அத்துவித வஸ்து'. இந்த அத்துவிதம் அநாதியானது. அநாதியில் ஒன்றுபட்டிருத்தல் மாத்திரையில் அமைதலின் அந்த அநாதி அத்துவிதம் 'ஒன்றாதல்' எனப்படும். அந்த ஒன்றாதலின் விளைவே, உயிர் உய்திகூடி, இறையோடத்துவிதப்படுதற்கு, மூல மூளையாய் இருத்தலின், அவ்வொன்றாதல், 'ஒன்றாதல் உபகாரம்' எனப்பட்டது. இவ்வொன்றாதல், உடனாதலேயாம். உடனாதல் விளைவு விளக்கம் என்றவாறு. ஆகவே, 'ஒன்றாதல்' உடனாதலேயாம். உடனாதல்விளைவு விளக்கம் என்றவாறு. அகவே, 'ஒன்றாதல்' உடனாதலாய், அஃ தாவது உடனாதல் விளைவாய் அதில் அடங்குமாறு காண்க. 'வேறாதல்' என்றால் என்ன? வேறோர் அத்துவிதம் உளதாதல் என்பது, 'வேறாதல்' என்பதன் கருத்து. தன்னோடு தொடர்புறுதல் இயலாதிருக்கும் உயிர்க்கு அது கைகூடும் பொருட்டு, புறம்பாக மற்றொன்றொடு நடக்கும் அத்துவிதம், இவ்வத்துவிதம் அதனால் இது, 'வேறாதல்' உபகாரமாம். உயிர் உய்யும் பொருட்டு இறை, மாயையோடு அத்துவிதப்படுவது, உயிர்த் தொடர்பின்றி நடப்பதால் வேறாதலாம் உயிர்க்கு உய்தி நல்குதலில் அது 'வேறாதல்' உபகாரமாம். 'வேறாதல்' என்பது இறையின் மற்றொரு அத்துவிதத்தைக் குறித்தலின், அத்துவித விளைவாய், தத்துவமாய், 'அது நீ' ஆதலாம், நீ என்றது இங்கே மாயையை. இவ்வேறாதல், அத்துவித விளைவு விளக்கமாய், உடனாதல் விளைவு விளக்கமாம். ஆகவே, ஒன்றாதல் வேறாதல் உபகாரங்கள், உடனாதல் விளைவு விளக்கமாய் அதில் அடங்கும். இறையத்துவித விளைவுக்கும், உயிரத்துவித நிலைக்கும், 'உடனாதல்' விளக்கமாம். உயிர்க்குயிரின் உடலத்துவிதம் விளைவாயும், உயிரின் அத்துவிதம், அத்துவித நிலயாயும் இருக்கும். முந்தியது, 'தத் துவம்; பிந்தியது, 'துவம் தத்'. ஒன்றாதல் உபகாரத்தால், அசைவு பிறந்த உயிர்க்குச் சற்றே விழிப்பு உண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் வேறாதல், உடனாதல் உபகாரங்களால் உயிர்க்கு, உயிர்க்குயிரோடு நிலையாய அத்துவித முத்திநிலை சித்தித்தற்கு வழிபுலமாமம்.

இவ்வாறே, வேறாதல் உபகாரத்துக்கும், உயிர் இருளிலிருந்து சிறிதே விழித்து வேறுபடுதற்கும் வேற்றுமை காண்க. அன்றி, அவ்வுபகாரத்தால் உயிரின் நிலை வேறுபடுதலும் காண்க. இவ்வுபகாரங்களால், இருளில் ஒன்றுபட்டுக் கிடந்த உயிர், வேறு செய்யப்பட்டு, இறையோடு நிலையாய உடனாதல் நிலை, கைகூடும் என்க. இது முடிந்த முத்திநிலையாம். இந்நிலையில், உயிர்க்குயிராகிய இறைவன், தானே தானாயிருப்பன்; 'அது அதுவாயிருக்கும்' என்றவாறு.

இது, அது 'வாக' - அது, அது 'வாம்' என்க.

அத்துவிதமாவது, பிரித்தறிய ஒண்ணாத இருபொருட் கூட்டரவு இறைக்கு உயிரோடு உளதாய அத்துவிதம் நித்தியமானது. உயிரிடத்தில் அறிவு பிரகாசிப்பதொன்றே அறியாமை இருளிலிருந்து விடுபடுவதற்கு வழி; ஒரே ஒரு வழி. உயிரின் அறிவொளி இறையொளியாகிய அருளொளியோடு அத்துவிதப்பட்டு, அருளொளி அறிந்து கொண்டிருப்பதைத் தானும் அறிவதன்றி, அருளொளியின் உபகாரமின்றி, உயிரின் அறிவொளி எதனையும் அறியாது; அறிதற்கு அருளொளியோடு அத்துவிதப்பட்டே தீரவேண்டும்.

பேரொளிப் பிழம்பாகிய இறையொளிக்குச் சிவசத்தி என்று பெயர். அது ஒரு ஞான சமுத்திரம்; கருணைக்கடல். இரங்காமலிருக்கமாட்டாமை அதன் இயற்கை. கருணைப் பிரவாகமாகிய சிவசக்தி, மாயை என்கின்ற ஒரு வகைச் சடசத்தியைப் பயன்படுத்தி, பல மடிப்புக்கள் கொண்ட மாயைத் திரையில் தான் மறைந்து நின்று, பேரொளிப் பிழம்பைத் தணிக்கைசெய்து, அவ்வளவிலும் அமையாமல், பல வேறு கவசங்களை உயிருக்கிட்டு, தணிக்கைசெய்த தன் ஒளிக்கதிர்களில் மிருதுவானதொரு கதிரை, உயிரை மூடியிருக்கும் கவசங்களை ஊடுருவச்செய்து, உயிரின் அறிவொளியோடு அத்துவிதப்படுத்தி, சிறிதே அறிவை அரும்பச் செய்யும். இச்சிற்றறிவு அறியாமையிருளிற் கிடைத்ததொரு சிறு விளக்கு. இவ்விளக்கின் இருப்பிடம் இந்தச் சரீரம். இச்சரீரம் உயிரின் வெளிப்புறக் கவசம். அக்கவசத்துக்கு அன்னமய கோசம் என்று பெயர். இச்சரீர விளக்கைப் பேணுகிற முறையிற் பேணுபவர்கள், அறியாமை இருள் விடியப்பெற்று, சரீர உதவியின்றியே, பேரொளிப் பிழம்பைத் தாங்குமாற்றலை அடைவார்கள்.

முத்திக்கு வித்தான இச்சரீரம், சத்தமும் அர்த்தமுமான இரு பிரபஞ்சக் கூட்டரவு. சத்தம் : மந்திரம், பதம், வன்னம் என மூன்று வகை. அர்த்தம் : கலை, தத்துவம், புவனம் என மூன்று வகை. ஆறும் அத்துவா எனப்படும். அத்துவா - வழி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை அடைதற்கு வழி. அத்துவாக்களாலான சரீர விளக்கில் கயிற்றரவுகளே காடசியளிக்கின்றன. அவைகளே காணப்படும் பிரபஞ்ச விநோதங்கள். இவற்றைக் காணும்போது அவற்றில் இச்சை பிறக்கிறது. இச்சை கர்ம மூலம். கர்மம் இருவினைகளைத் தருதலால் உயிர் பிறவிக் கடலில் ஆழ்ந்து, அலைந்து, அலுக்கும்போது இருவினை ஒப்புப் பிறக்கலாம். அதனால், ஆணவம் வலி குன்றும். குன்ற, உயிர் பக்கவம் எய்தி, மாயையின் உதவியின்றியே, பேரொளியைத் தாங்கும் ஆற்றல் தலைப்படும். அப்பொழுது கர்ம மூலமான இச்சை, இனிய இச்சையாகும். இனிய இச்சை - இன்னசை. இன்னசை வாய்த்த பக்குவ உயிர், இறையாகிய கயிற்றைக் காணும் அக்கணமே சரீரமுட்படப் பிரபஞ்சமாய்க் காணப்பட்ட கயிற்றரவுகள், கனவாய்ப் பழங்கதையாய் மறையும்.

அத்துவித நிகழ்ச்சியை விளக்கஞ்செய்யும் விளக்கங்கள் வட மொழியிலும் தென்மொழியிலும் உள்ள மகா வாக்கியங்கள். 'தத்துவமசி', 'துவம்தத்தசி' என்ற மகாவாக்கியங்களில், 'தத் துவம்' இறையத்துவிதத்துக்கும், 'துவம் தத்' உயிரத்துவிதத்துக்கும் விளக்கங்கள். தத்துவம் - அது நீ; துவம் தத் - நீ அது. இறையாகிய 'அது', நீயாயிருக்கிறது; நீ 'அது' வாதல் வேண்டும் என்றவாறு. இந்த இரு விளக்கங்களையும் தரும் சிறப்புடையது, 'உடனாதல்'. அதனுடன் அதுவாதல் என்றவாறு. அது, உன்னுடன் நீயாதலும், நீ அதனுடன் அதுவாதலுமாம். தத் துவமுமாம்; துவம் தத்துமாம். இருவகை அத்துவிதத்துக்கும் பொதுவான 'உடனாதல்', விளைவுமாம்; நிலையுமாம். 'விளைவு' உபகாரம்; 'நிலை', உபகாரத்தைப் பெறுவது. உடனாதல் நிலக்குச் சிறப்புப் பெயர்கள் இல்லை. சகலத்திலும், உடற் குடிலில் உயிர்க்கயிராகிய இறையும், உயிரும் ஒருங்கு குடிபுகும். இறைவன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் உபகரிக்கின்றான். உயிர் இறையோடு அத்துவிதப்படும்போது, அது, 'துவம் தத்' தாகிய உடனாதல் நிலையாம். அப்பொழுது, இதுகாறும் தத்துவனாய் நின்று உகரித்த இறைவன் 'தத் துவ' நிலை போய்த் தானே தானாவன்; 'தத் தத்' தாம். இது அதுவாக, அது அதுவாம் என்றவாறு. இது - உயிர். இது அதுவாதல், சிவமயமாதலாம் என்று கூறும் வேதாந்தத் தெளிவாகிய சைவசித்தாந்தம். சைவசித்தாந்தம் சுத்தாத்துவித சைவசித்தாந்தம் எனவும் கூறப்படும். சுத்தாத்துவிதம் என்பதில் சுத்தம், 'கேவல சகல சுத்தம்' என்பதில் வரும் சுத்தாவத்தை. உயிரத்துவிதம் 'ஏகம்' எனவும், சிவானுபவம் விளைதலின் 'இன்பக் கூடல்' எனவும்படும். 'உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கே உரித்து' என்ற சித்தியாரும்; 'தாடலை என்ற திருவருட்பயனும், ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவை.

வினைமுதல் - இறவைன்; விதை முதல் - மாயை. வினை - பிரபஞ்சத் தோற்றரவு வினை. இச்சரீரமே கயிற்றரவு; சத்தமும் அர்த்தமுமான அறுவகை அத்துவாக்களின் கூட்டரவே இச் சரீரம். இச் சரீரம் உட்படப் பிரமாண்டமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சம் அனைத்தும் அத்துவாக்களின் கூட்டரவே. இக் கூட்டரவை முக்கூறு செய்து, 'அவன் அவள் அது எனும் அவை' என்கின்றது சிவஞானபோதம். அவை - கூட்டம்.

'அவன் அவள் அது எனும் அவை, மூவினைமையின், தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்' என்பது சிவஞானபோத சூத்திரம்.

அவன் அவள் அது எனும் அவை, மூவினைமைய - தோன்றி நின்று ஒடுங்குவன; மூவினைமையின் - இங்ஙனம் மூன்று வகை வினைகளும் நடந்துகொண்டு இருப்பதால்; திதி - இப்பொழுதைய நிலை; தோன்றிய திதி - தோற்றத்தின் பின்னதாயநிலை. ஆகவே அடுத்து வருவது ஒடுக்கம். ஒடுங்கி மீண்டும் உளதாம். இவ்வாறு தோன்றி நின்று ஒடுங்குதற்குக் காரணம் மலம். மலத்துளதாம் - மூலமலம் காரணமாக கன்ம மலத்துக்கேற்றவாறு, மாயாமலத்தில் உளதாம் என்றவாறு. தோற்றம் நிலை ஒடுக்கம் மீண்டும் மீண்டும் உளதாம் என்க. "நீல மேனி வாலிழை பாகத்து ஒருவன் இருதாள் நிழற்கீழ் மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே" என்பது ஐங்குறுநூற்றுக் காப்பு. மூவகையுலகு - தோன்றநின்றொடுங்கும் உலகு. அவன்தாள் நிழற்கீழ் என்றது, அவன் சந்நிதியை. சந்நிதியில் உலகு, மாயைத் திரையில் குமிழி விட்டுக்கொண்டிருக்கும். அதனால், அவனே உலகை ஆக்கி நிலைபெறச் செய்து ஒடுக்குகிறான் என்றும் கூறலாம். கம்பர் "உலகம் யாவையும் தாமுள வாக்கலும், நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டு" என்கின்றார். "நீங்கலா அலகிலா விளையாட்டு" என்பது மிக்க கருத்துள்ள தொடர். தோற்றம் நிலை ஒடுக்கம் எப்பொழுதும் நடைபெறும் விளையாட்டு என்றவாறாம்.

மிக்க பக்குவர்களுக்கு அஃதாவது உயிர்க்குயிரான இறையாகிய கயிற்றைக் காண்பார்க்குக் கயிற்றரவாகிய உலகு இல்லை; கேவலாவஸ்தையாகிய இருளிற் கிடக்கும் குருடுபட்ட உயிர்களுக்கும் உலகு இல்லை. இந்த இன்மைகளிரண்டும் தம்முள் வேறுபட்டவை. சகலாவஸ்தையினரான - மாயையின் உதவிபெற்றோரான - நம்மவர்க்கே, கயிற்றரவான இவ்வுலகு காட்சியளிப்பதாம்.

"ஆதிபகவன் முதற்றே உலகு" என்பதில் ஆதிபகவனை 'முதல்' என்றதும், 'உலகத்துக்குக் கருத்தா சிவபெருமான்' என்ற சைவவினாவிடையில் சிவபேருமானைக் 'கருத்தா' என்றதும், பிரபஞ்சமாகிய அரவுகளுக்கு 'நிமித்தமாதல்' பற்றியேயாம். கயிற்றரவு கயிற்றின் சந்நிதியில் தோற்றரவு செய்வதன்றி, கயிற்றின் மீது தோற்றுவதில்லை; அஃதாவது, கயிற்றின்மீது கயிற்றரவு முளைகொள்வதில்லை. இறை, வினைமுதல்; நிமித்த காரணன். மாயை, வினை முதல்; முதற் காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேவல சகல சுத்த அவஸ்தைகள் மூன்றும், மூலமான காரண அவஸ்தைகள். காரிய அவஸ்தைகள், எண்பத்துநான்கு இலட்சம். இந்த அவஸ்தைகள் பற்றி உயிர்கள் எடுக்கும் தேகம் எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதம். தேவர் தொடக்கம் தாவரம் ஈறானவை குறிப்பிட்ட யோனி பேதங்கள். கேவலாவஸ்தைக்கும் சுத்தாவஸ்தைக்கும் இடையேயான சகலாவஸ்தை இடைவெளி, கோடி சமுத்திரப் பரப்பேயாயினும் ஆகுக; அத்துணை ஆகாயவெளிப் பரப்பேயாயினும் ஆகுக; அதனைக் கடப்பதற்கு உபகாரமானதொரு சடச்தி உண்டு. அதற்குப் பெயர் : மாயை. இது, பல துர்க்குணங்களோடு கூடியதாயினும், இருளோடும் அருளோடம் சம்பந்தப்படும் இயல்பினது. இறையொளி இந்த மாயையோடு அத்துவிதப்பட்டு, உயிர்களுக்கு அநுக்கிரகிக்கின்றது. இந்த அனுக்கிரகத்தால் கேவலாவஸ்தையில் கிடந்த உயிர்களுக்கச் சகலாவஸ்தை கிடைக்கின்றது. எண்பத்துநான்கு நூறாயிரம் பேதமுள்ள உயிர்கள் சகலாவஸ்தையினர். இச் சரீரம் உட்பட அறுவகை அத்துவாக்களின் கூட்டரவான பிரமாண்டமான பிரபஞ்சமனைத்தும் இறவைன் அத்துவிதப்பட்ட விசேடத்தால் மாயையில் முளைத்தவை. மாயையின் உபகாரத்தால், இன்னிசை வாய்க்க முயல வழி புலமாம். புலமாகும் வழியை விலகி, அத்துவாக்கள் நமக்குக் கிடைத்தவைகளை, வீண்விரயஞ் செய்து விடுகிறோம். நமக்குக் கிடைத்த இச்சரீரத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்று சிந்தித்தால் வீண்விரயம் தெளிவாம்.

இனி மாயையின் வலியோனான சூரபத்மன் விஷயத்தில், மாயை மயக்கமே செய்தது. முதலில் மாயை சூரபத்மன் ஆதியோர்க்குக் காசிபர் உபதேசத்தை மாற்றிச் சுக்கிராசாரியார் உபதேசத்தைக் கேட்கவைத்து கொலையொடு களவு காமம் நிலையெனப்புரிய, மகாயாகத்தைச் செய்வித்துச் சிவனருளால் வரம்பிலா வரங்களையும், ஆயிரத்தெட்டண்டங்களிலும் நூற்றெட்டு யுகம்வரை ஆட்சிபுரிய வைத்து, பின்னர் சூரசம்மாரம் செய்வித்து, திருமுருகன் திருப்பெரு வடிவத்தைத் தரிசிப்பித்து சேவலும் மயிலுமாக இறைபதம் எய்தச் செய்து, சூரபத்மனின் அதிதீவிர பக்கவ நிலையில் தன் உபகாரம் முற்றுப்பெற்ற நிலையில் மறைந்தாள் மாயை காசிபர் தொடக்கம் சுக்கிராசாரியார் பரியந்தம் அத்துவாக்களைப் பயன்செய்தவாறும், மாயையின் மாற்றமும் நினைவில் வைக்கவேண்டியவை. பஞ்சகிருத்தியத்தில் முதல் மூன்று கிருத்தியமும் மாயையாகிய விளைநிலத்தில் நடப்பவை. சகலாவஸ்தை மாயையாற் கிடைத்தது. சுத்தாவஸ்தைக்கு வழிசெய்வது சகலாவஸ்தை. சகலாவஸ்தை உள்ளமுக்கைப் போக்கு முகமாகப் பிறவிக்கடலை நல்கிப் பக்குவப்படுத்தி முத்தியாகிய சுத்தாவஸ்தைக் கரையை அணுகச் செய்வதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தி அனுபவம் கைகூடுவது மாயையின் உபகார மாத்திரையின் அமையாது. அதனால் மாயையை உபகரித்த அருட்சத்திதானே, திரோதான சக்தியாகி ஆணவம் முதலிய மலங்களை அதிட்டித்து, அவைகள் கிளர்ந்தெழுந்து அடங்கி வலிகுன்ற வழிசெய்து, முகந்த வினைகளை ஊட்டும்முறையில் நல்வினையும் பொன்விலங்காதலை அறியவைத்து, அவ்வாற்றால் இருவினையொப்பு வருவித்து, மலபரிபாகம் பண்ணி, மலபந்தமுற்றிருந்த உயிரை ஆணவத்தோடத்துவிதமானபடி, மெய்ஞ்ஞானத் தாணுவினோடு அத்துவிதப்படுத்தும் என்க. சுவாமி சந்நிதியில் இடும் திரை போன்றது திரோதான சக்தியின் மறைப்பு. இத்திரை சுவாமியை மறைப்பதுபோத் தோன்றினாலும், தரிசனத்துக்குக் காத்திருப்பவர்களின் உலக விவகாரங்களை மறைத்து, அவைகளை மறக்கச் செய்து, சினிமாப் பாட்டுப் பாடும் வாயில் 'தலையே நீ வணங்காய்' எனப் பாராயணஞ் செய்ய வைத்துவிடுகின்றது. தீபாராதனைச் சமயத்தில் திரை விலகியதே தெரியாமல், ஒளிமயமான சுவாமி தரிசனம் கிடைக்கின்றது. சுவாமி தரிசனம், திரோதான சக்தி பக்குவநிலையில் அருட்சக்தியாய் மாறுவதை நினைவுகூர்விப்பதாம். மறைத்தல் பஞ்சகிருத்தியத்தில் நான்காவதாம்; அது பக்குவப்படுத்துவதோர் அனுக்கிரகமாம். குதிரையின் இரு கடைக்கண்களையும் மறைக்கும் மறைப்புப் போன்றது திரோதானம். குதிரையை நேர்வழியிற் செல்ல வைப்பது கடைக்கண் மறைப்பு. 'நாம் எங்கிருந்து வந்தோம்? இனி, எங்கே செல்வோம்? இப்பொழுதைய சுற்றத் தொடர்பின் இரகசியம் என்ன?' ஒன்றும் தெரியவில்லையே! தெரியாமையாகிய மறைப்பு, நன்மைக்கே என்பதை அறிய முடியுமானால், திரோபவமும் அனுக்கிர கிருத்தியம் என்பது புலமாம். இத் திரோதானமே அருளல் என்கின்ற கிருத்தயத்துக்கு நேர்வழி செய்வது. ஊன்றிய திருவடி ஆணவமாகிய முயலகன் வலியை அடக்கி, மறைத்தலாகிய திரோதான கிருத்தியம் செய்ய, எடுத்த திருவடி அருளற் கிருத்தியம் நடத்துவது காண்க.

இறையொளியாகிய சிவசக்தி நம்மைப் பேதித்து வளர்த்தெடுக்கும் பெய்வளை மடந்தை. அவள் அநாதி கேவலத்தில் இருளாய், சகலத்தில் மாயை தந்த சரீர விளக்கில் மங்கலான திரோதானமாய், சுத்தத்தில் பரிசுத்த ஒளிவிளக்காய்க் காட்சியளிப்பாள்.

'கன்மமும் மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்' என்பது சித்தியார். கன்மத்துக்கு மூலம் 'இச்சை'. உயிர்களுக்கு அறியுந்தன்மை, இச்சிக்குந்தன்மை, செயல்செய்யுந்தன்மை உண்டு. உயிர்களின் அறிவிச்சை செயல்களுக்க வியஞ்சகம், இறைவனின் அறிவிச்சை செயல்கள். இருளிற் கிடக்கும் உயிர்க்கு முதலில் விருத்திப்படுவது செயல்; அதன்படி வித்தை; பின், இச்சை விருத்தியுறும். இது அருள்ஒளியைப் பெறும் உயிர்களின், செயல் அறிவு இச்சைகளின், விருத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரமம். விருத்தி வளர்ச்சியுறும்பொது, அறிவு இச்சை செயல் எனக் கிரமம் மாறும். இச்சை நடுநாயகமாய் அறிவு செயல்களைப் பாதிக்கும்; செயலைப் பாதிக்கும் அளவில் அமையாது, அதன் மூலமாயுமிருக்கும். இச்சை கன்ம மூலம். அது மனக் குதிரையில் இவரும்போது அதன் வேகத்தைத் தடுத்தல் அரிது. இம்மியளவு இச்சை மேரு அளவு தவறுதலை வருவித்துவிடும். இதற்கு உதாரணம் குடமுழ நந்தீசர், மாணிக்கவாசகர் ஆனதும்; ஆலாலசுந்தரர், தம்பிரான் தோழர் ஆனதும். மாணிக்கவாசகரின் இச்சை இந்திரச் செல்வத்தை மதித்தது. சுந்தரரின் இச்சை பெண்களைப் பற்றியது. அப்படி இருந்தும் இறுக்கமான தெய்வப் பிடி, நெருக்கமான தோழமை, அதிதீவிர பக்குவத்தை வருவித்துவிட்டன. நமக்குப் 'பித்தா பிறை சூடி' வாய்த்தது. திருத்தொண்டத்தொகை கிடைத்தது; பெரியபுராணம் உருவானது.

மாணிக்கவாசகர், முதன் மந்திரியாய், வாசியிலேறி வாசி வாங்கச் சென்றதும், அந்தவாசி சென்றவழி மாறி ஒரு தெய்வவழி சென்றதும், அது அவருக்கு நல்ல வாசியாய்த் திருப்பெருந்துறையில் ஆட்பட்டதும் அறிந்தவை. பின்னர் குருவாகிய சிவனின் பிரிவாற்றாது புலம்பிய புலம்பலான திருவாசகம் கிடைத்தது ஒரு பெரும் பேறு. அன்பின் மிகுதியால் கண்ணப்பர் கண்ணை இழந்தார்; சத்தியத்தை மறந்தார்; சுந்தரர் கண்ணை இழந்தார். கடவுளின் கருணை இருந்தவாறு.

பேதித்து நம்மை வளர்த்தெடுப்பவளாகிய சிவசக்தி, சடசக்தியாகிய மாயை மூலம் இருண்மலத்தைக் கலக்கி வெளியேறச் செய்யும். மலத்தின் வெளியேற்றமே கன்மப் பிரவாகம். கன்ம மூலம் இச்சை. இச்சையின் காரியப்பாடே கன்மப் பிரவாகம். கன்மப் பிரவாகந்தானே இருவினைகளாகிய இரட்டைகள். இருவினைக்குப் பயன் பிறவி. உயிர்கள் இருவினை காரணமாகப் பிறவிக் கடலில் உழலும். இருவினைகளைப் பிறவி தோறும் அனுபவிக்க அனுபவிக்க ஆணவம் வலி குன்றும்.

தீவினையே செய்யும் உயிர்களும் ஒரு காலத்தில் நல்வினை செய்து உயர்ச்சியுற விரும்பும். இந்திரச் செல்வங்களில் இச்சை அதிகரிக்கும். மற்றொரு காலத்தில் "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்ற நிலை நேரும். அந்நிலையில் 'நல்வினையும் பொன்விலங்கு' என்ற எண்ணம் உண்டாகும். அக்கணமே இருவினை ஒப்பு உண்டாகும். அந்நிலையே மலபரிபாகம் எனப்படும். இந்நிலையில் சிவசக்தியாகிய அரள்ஒளி மேலிடும். ஒளி மேலிடுதல் சத்திநிபாதம் எனப்படும். சத்திநிவாபதம் திருவருளாகிய சக்தி பதிதல். உயிர் மெய்ஞ்ஞானத் தாணுவினோடத்துவிதப்படும்.

தீவினைகளின் கொடுமைகளைக் காட்டி நல்வினையில் நெறிப்படுத்தலே நூல்களின் முக்கி நோக்கம். நல்வினையில் நெறிப்பட்ட உயிர்க்கே ஒரு காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினை ஒப்புப் பிறக்கும். எடுத்த பிறப்பில் அனுபவிக்கும் இருவினை அனுபவங்கள் பிராரத்தம் எனப்படும். காலம் நியதி என்ற தத்துவங்கள், எடுத்த பிறப்பின் கால எல்லையையும், வாழ்க்கைப் போக்கையும் அறிவிப்பவைகள். பிராரத்துத்துக்கு ஒரு குழந்தை உண்டு. குழந்தைக்குப் பெயர் ஆகாமியம். பிராரத்தத்தை அனுபவிக்கும்போது உண்டாகும் விருப்பு வெறுப்பே ஆகாமியம். அது சம்பாத்தியம். பிறப்புத் தோறும் சம்பாதித்த ஆகாமியத்தின் குவியலுக்கச் சஞ்சிதம் என்று பெயர். சஞ்சிதக் குவியல் மகாமேரு போன்றது.

இவன் பிராரத்தத்தை ஆகாமியம் ஏறாமற் புசிப்பான்; இன்னான் ஆகாமியம் ஏறாமற் புசிக்க மாட்டான் என்பதும், பிறந்த கால நேர நுட்ப மூலம் சோதிடம் நிச்சயம் செய்யும். பிராரத்த அனுபவங்களை ஊட்டுபவை கிரகங்கள். இவை இறைவன் ஆணைவழி நிற்பவை. சம்பந்தப் பிள்ளையார் இறைவனைப் பற்றி நின்றமையால், இறைவன் ஆணைவழி நின்ற கிரகங்கள், பிள்ளையாரின் ஆணைவழி நின்றன. நாமெல்லாம் சம்பந்தராதல் இயலாது. இயன்றளவு ஆகாமியம் ஏறாமல், பிராரத்தத்தைப் புசிக்க முயல்வோமாக.

"இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்".

இன்பக் காலத்தில் இன்பத்தில் விருப்பம் வையாமல் 'லபித்திருக்கிறது' என்ற அளவில் - இன்பத்தை அனுபவித்தல் மாத்திரையில் அமைபவன், அவ்வாறே துன்பக் காலத்தில் துன்பத்தில் வெறுப்பின்றி அனுபவிப்பன். அப்படிப்பட்டவன் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற பொன்மொழியைப் பேணி, நன்மை தீமைகளுக்கு இன்ப துன்பங்களுக்கு - நானே கருத்தா என்பதில் ஸ்திரம் அடைந்து இன்ப துன்ப வாயில்களை உவத்தல் பசைத்தல் இன்றி இருப்பன்; ஆகாமியம் ஏறாமல் தன்னைப் பாதுகாப்பன் என்றவாறு. இச்சை சும்மா கிடவாது. மனக்குதிரையில் கொலுவிருந்து கொண்டு ஒரு நிமிஷத்தில் எண்ணிறந்த பிறவிகளுக்கான ஆகாமிய வித்துக்களை முளை செய்து விடும்.

ஆகாமியம் ஏறாமல், பிராரத்தத்தைப் புசித்தவர் நெற்றிக்கண் வெளித்த மௌன தவமுனி சைவாசிரிய கலாசலை உப அதிபராயிருந்த மகான் திரு. பொ. கைலாசபதி அவர்கள் என்றும், இது வேண்டும் அது வேண்டும் என்று அந்த மனிதத் தெய்வம் எதனையும் வேண்டுவதில்லை; தீண்டுவதில்லை. உள்ளது போதும் என்ற நிலை குடிகொண்டிருந்தது. சூழல் அது தேவை இது தேவை என்று பறந்தடித்துக் கொண்டே இருந்தது. இறைவனையும் அவனை அடையும் நெறிகளையுமேயன்றி பிறவற்றை பந்தப்படுத்துவனவற்றை திண்டாதிருத்தலாகிய திணடாமைக் கோட்பாட்டை இறுகப் பற்றியிருக்கின்றது அந்த மனிதத் தெய்வம என்பதைச் சூழல் அறியுமாற்றல் அற்றிருந்தது. அச்சூழலில் தாமரையிலையில் நீர் போல அது இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சந்தர்ப்பத்தில் 'தீண்டாத கற்படைய செழுந்திரு' என்று திரௌபதியைக் குறிப்பிடுவது சிந்திக்கத் தக்கது. ஐவரும் பதிகளாகவும், அவர்களுக்கூடாக அந்த ஒருவன் என்ற ஒருவனையே பற்றி நின்றவள், அந்தத் தீண்டாத கற்புடைய செழுந்திரு. 'தீண்டாதாரே சைவர்'. அஃதாவது சிவசம்பந்தமுடையர். தீண்டாமை கைவந்தவர்க்குத் தீண்டப்படாமை சித்திக்கும். இத்தீண்டாமை, தீண்டப்படாமை அந்த மனிதத் தெய்வத்திடம் காணப்பட்டன. சாமி காட்டுவதோ, சாமிப் பரிபாஷை பேசுவதோ அந்த மகான்பால் இல்லாதவை. அவருக்கு ஆகாமியம் ஏறாமற் பிராரத்தத்தை அனுபவிப்பது எளிதாயிற்று. ஆகாமியத்தின் இடத்தில் 'தவம்' வீற்றிருந்தது. உப அதிபர் கண்ட உண்மைகளுள் ஒரு சில. "வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல் ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன" என்பது திருமந்திரம். வேதம் பொது; ஆகமம் சிறப்பு என்றதன் கருத்தென்ன? என்பது ஆழ்ந்து சிந்திக்கற்பாலது. சமய சர்வகலாசாலையில் பிரவேசிக்க விரும்புபவர் அனைவருக்கும் வேதம் பொது. வேதநெறி கைவந்தவர்கள் தாம் சமய சர்வகலாசாலையிற் பிரவேசிக்கும் உரிமையுடையர். வேதநெறிக்கு வைதிகம் என்று பெயர். வைதிகம் முற்பிறப்பிலோ இப்பிறப்பிலோ முற்றியபோது லபிப்பது சிறப்பு நெறியாகிய ஆகமநெறி. ஆகமம் எண்ணிலி கோடி என்கின்றது திருமந்திரம். 'ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணம் கேட்பான் அளவில்லை' என்கின்றது ஞானசம்பந்தக் குழந்தை. வைதிகம் முற்றுப்பெற்றவர் தத்தம் பக்குவத்துக்கேற்றவாறு கிரைடத்த ஆகமநெறியில் நிற்பர் அருச்சுனர் கண்ணனின் வழி நின்று வைதிகம் முற்றுப்பெறற்றவர். அடுதத பிறப்பில் அதிதீவிர பக்குவம் மிக்குக் கண்ணப்பரானார். பெரியபுராணத்தில் எழுபத்திரண்டு ஆகமநெறிக்கு உதாரணம் காட்டப்பட்டது. அறுபத்துமூன்று தனி நெறி, ஒன்பது தொகை நெறி, தொகையடியார் நின்ற நெறி. இவ்வாற்றால் வேதம் பொது ஆகமம் சிறப்பு என்பது புலாம். நமது சமயம் வைதிக சைவம். மவதிகம் வேதநெறி ; சைவம் ஆகமநெறி.

'புண்ணியம், மேல் நோக்குவிக்கும்; பாவம் கீழ் நூக்கும்' என்கின்றது சித்தியார். புண்ணியம்; நல்வினை பாவம் தீவினை. 'புண்ணியமாம் பாவம் போம்' என்கின்றார்எல்லாம் அறிந்த ஔவை.

இறைவன் 'நிறுத்துவதோர் குணமில்லான்', ஓடி மீள்கென ஆடல் பாத்த்திருப்பவன்', என்கின்றார் அருணந்தசிவம். இறைவன் உயிர்களை 'நில்' என்று தடுத்துநிறுத்துவதில்லை; உயிர்களின் ஓட்ட ஆட்டங்களைப் பார்த்துக்கொண்டு இருப்பவன்; ஓடி ஆடிக் களைத்து 'என் செயலாவது யாதொன்றும் இல்லை' என்கின்ற பக்குவ நிலையைப் பார்த்துக் கொண்டிருப்பவன். அவன், 'ஆடல்' பார்த்திருப்பவனுமாம். 'ஆள்தல்' பார்த்துக் கொண்டிருப்பவனுமாம். இறைவன், நிறுத்தாதே ஆடல் பார்த்திருப்பவன். இந்த அருணிலை யாசாரமே, சான்றோர் மேற்கொள்ளும் ஆசாரம்; ஔவையாராதிச் சான்றோர் ஆசாரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பொருளைச் சார்வதனால், பற்றியிருந்த பற்றுக்கள், நித்திரையிற் கைப்பொருள் போல் நீங்க வருவதே துறவு; நீக்க வருவது துறவன்று. அது நரித்துறவு. எட்டாத பழம் நரிக்குப் புளித்த கதை யாவரும் அறிந்தது. நீங்க வருவதை நீக்கி அடைய முயல்வது தலைகீழ் முறை. சார்புணர்ந்து (பொய்யான) சார்புகெட ஒழுகுவதே முறை. சீவகன் துறவு, சார்புணர்ந்து வந்த துறவன்று; பகைக்கஞ்சி வந்த துறவு. இந்திரன் துறவு ஆகாமியமாய், நல்வினைப் பயனை இழந்து, தீவினையில் இறங்கச் செய்து விட்டது. பொன் விலங்கு இருப்பு விலங்காயது.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

என்கின்றார் வள்ளுவதேவர். ஒருவன், 'தன்னைத்தான் காதலனாயின்' அவனால் ஊர்டந்து செல்லும் எறும்புக்கும் 'உறுகண் உண்டாகாதே' என்று தீவினையை விலகி வாழ வழி அருளுகின்றார் வள்ளுவர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னால் ஒரு கோவலனுக்கு மரணம் நேர்ந்ததே என்று ஏங்கித் தன்னுயிர் நீத்தான். மனுநீதிகண்ட சோழன் தன் மகனின் மருமத்திற் தேரை ஊர்ந்து நீதி செய்தான். கன்று துள்ளி எழுந்தது ; மகன் தந்தையைக் கட்டித் தழுவினான். 'தன்னைத்தான் காதல்' இருந்தவாறு,

இன்பத் துன்பங்களான பிராரத்த அனுபவங்கள் வரும் வாயில்கள் ஆதிதைவிகம், ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம் என முத்திறப்படும். ஆதிதைவிகம் தெய்வம் காரணமாக வரும் இன்பத் துன்பங்கள். ஆதியான்மிகம் - உயிர்கள் வாயிலாக வரும் இன்பத் துன்பங்கள். ஆதிபௌதிகம் - பூதங்கள் வாயிலாக வருமின்பத்துன்பங்கள்.

ஒருவன் பிற உயிர்க்கு உறுகண் விளையாமல் நடத்தல், அவன், 'தன்னைத்தான் காதலன்' என்பதற்கு நல்ல அறிகுறி. அஃதாவது, தன்னைத்தான் காதலனாய் உயிர்க்கு உறுகண் விளையாமல் நடத்தல், வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கைக்கு, மூலாதார தத்துவம்; அடிப்படை அத்திபாரம்; அசைக்க முடியாத வைரித்த அத்திபாரம்.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பது, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடலின் இரண்டாம் அடி. அந்த அடியில் 'தீது பிறர்தர வாரா' என்பதை நன்கு ஆராய்ந்து, நாம் அநுபவிக்கும் அநுபவத்துக்கு நாமே கருத்தா என்பது ஸ்திரமாக வேண்டும். கண்ணகி தெய்வக் கண்ணகியாய் மாறியதும் 'பாண்டியன் வெறும் வாயில்; கோவலன் வினையே அவன் மரணத்துக்குக் காரணம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைக் கண்டாள். 'தென்னவள் தீதிலன்' என்பது தெய்வக் கண்ணகி கூற்று. துன்ப அநுபவத்துக்கு, அது வந்த வாயிலை நோவது எய்தவனிருக்க அம்பை நோவதாம். சிலர் மனத்தை நெறிப்படுத்தலே வலாழ்க்கையின் மூலாதார அடிப்படைத் தத்துவம் என்று நினைக்கிறார்கள். நமக்குக் கிடைத்த அறிவுகொண்டு, பிறர்க்கு - பிற உயிருக்கு - இடுக்கண் வாராமல் வாழ்க்கை அமைந்தபின்பே, மனத்தை நெறிப்படுத்த முடியும். மனம், இறைவன் அருளிய தத்துவம்; அதை நம் அறிவால் நெறிப்படுத்த இயலாதென்பது, 'இந்திரியம் எனைப் பற்றி ஈர்ப்பது தந்தவன் தன் ஆணை' என்ற சித்தியாரால் அறியலாம். கிரகம் ஆதிதைவிகமாய் எவ்வளவு வலியுடைத்தோ அவ்வளவு வலிபடைத்தது மனம்.

தருமம் ஞானம் என்ற இரண்டையும் எடுத்தக்கொண்டு எது முதற்கண் அநுட்டிக்கற் பாலது என்று வினவினால், ஞானத்துக்குத் தவணையிடலாம் ; பொறுத்துச் சிந்திக்கலாம். தருமத்துக்கோ தவணையிடலாகாது. தருணம் நேரும் அக்கணமே செயற்பாலது தருமம். 'அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க' என்பது வள்ளுவர் கூற்று. 'தீது பிறர்தர வாரா' என்பது, தருமம் போன்றது; அக்கணமே அநுட்டிக்கற் பாலது. 'நன்று பிறர்தர வாரா' என்பது, பெரிய உண்மையேயாயினும், இப்பொழுது அந்தவுண்மை நமக்கெட்டாதது; வெகு உச்சத்தில் உள்ளது.

'நன்றி மறவேல்', 'உதவி வரைத்தன்று உதவி ; அது செய்தவர் சால்பின் வரைத்து'. 'சான்றோர் இனத்திரு', 'பெரியோரைக் கனம் பண்ணு' என்ற நீதி வாக்குக்கள் அனைத்தும், இன்ப அனுபவம் வரும் வாயில்களையே வாழ்த்தி வணங்கும்படி போதிக்கின்றன. அவை வெறும் வாயில்கள். அவர்களுக்கூடாக இறைவன் ஊட்டுகின்றான் என்ற உண்மையை அனுபவ சாதக மூலம் அறியும்வரை, நாம் வாயில்களையே வாழ்த்தி வணங்க வேண்டும். சாத்திரங்களில் உலகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரம் என ஐந்து வழிகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. உலகவினை: கிணறு, குளம், தண்ணீர்ப் பந்தல், அன்னசத்திரம் முதலியன அமைத்தல். வைதிகவினை : வேள்வி முதலியன செய்தல். அத்தியான்மிகவினை : சிவபூசை முதலியன செய்தல். அதிமார்க்கவினை: யோகம் செய்தல். மாந்திர வினை : மந்திரம் செபித்தல், ஞான நூல்களை ஓதல் முதலியன. இவ்வைந்தும் ஒன்றற்கொன்று ஏற்றம் உடையன. 'தீது பிறர்தர வாரா' என்பது, தர்மச் சாதி . உடன் தொடங்க வேண்டியது. 'நன்று பிறர்தர வாரா' என்பது, ஞானச் சாதி. பொறுத்துத் தொடங்குதற்குரியது. முன்னையது அடிநிலை. பின்னையது முடிநிலை. 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் நாவலர்பெருமான்.

"தாடலைபோற் கூடியவை தானிகழா வேறின்பக்
கூடலைநீ யேகமெனக் கொள்". - திருவருட்பயன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிபுரை

தெய்வத் திருவருளையே சதாசிந்தித்தும் வந்தித்தும் வாழ்ந்தவர் பண்டிதமணி ஐயா; தமிழ் முனிவர்; மாசற்ற காட்சியர்; மூதறிஞர். அவர் உரைகண்ட 'திருவருட்பயன்' நூலையும் பார்த்துப் பார்த்துத் திரும்பத் திரும்பப் படி எழுதும் பாக்கியம் தமியேனுக்குக் கிடைக்கப்பெற்ற பான்மையால், இந்த இரண்டு நூல்களிலும் காணக்கிடைத்தவற்றைச் சுருக்கி எழுதவேண்டும் என்னும் எண்ணம் உதித்தது. இயன்றளவு எனது சிற்றறிவுக்கு எட்டியவரை சுருக்கி எழுதியுள்ளேன். 'சைசித்தாந்தம் எங்கே! நாம் எங்கே! எனப் பண்டிதமணி ஐயா கூறிப் போந்துள்ளார். அவ்வண்ணமே தமியேனும் 'பண்டிதமணி ஐயா எங்கே! நான் எங்கே! எனது சிறுமையை எண்ணி அப்பெரியோரது பாத கமலங்களுக்கு இதனைச் சமர்ப்பிக்கின்றேன்.

அண்டிய வமரர் தம்மை ஆலமுண் டவன்றன் காப்பாய்
மிண்டிய மாயா வாதப் பேயினை யகலக் காய்ந்த
கண்டினுங் கனிந்த சொல்லின் கணபதிப் பிள்ளை யாசான்
பண்டித மணியின் பாத பங்கயங் கருத்துள் வைப்பாம்.

- ச. தங்கமாமயிலோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sivaranjanam Offset Printers, Palaly Road, Kondavil. T.P 222 6722

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org